முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1567

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**13.01.2024**, சனிக்கிழமை

1. கருணைமிக்க ஞானியே அரங்கா
   கலியுகம் காக்க வந்த தேசிகா
   பெருமைமிக்க அன்னதான சேவை
   பேருலகமெங்கும் ஆற்றி அருளுகின்ற குருராஜா
2. அரசனே அரங்கனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
   அருளுவேன் ஞான அறிவுரை ஆசி
   (சோபகிருது வருடம் மார்கழி மாதம் 28 ம் நாள், 13.01.2024, சனிக்கிழமை)
   வரமாக அரங்கன் நீ தரும்
   வல்லமைகொண்ட தீட்சை அனைத்துமே
3. அறமாக மக்களிடை நிரம்பி
   அற்புதத்தை நடத்துவது உறுதி உறுதி
   உறுதி கொண்டு அரங்கனே உன்னுள்
   உயர்வாக நான் எப்பொழுதும் இருக்க
4. கருதிவந்து உன்னை கண்டுகொண்டு
   கடைத்தேற்றம் வேண்டி நிற்பவர் அத்துனைபேருக்கும்
   அத்துனைபேருக்கும் ஆறுமுகன் என் ஆசிகிட்டி
   அகிலத்தில் அவர்களெல்லாம் பிறவா பெரும் பேறு
5. பேறுதனை அரங்கன் உன் ஆசியோடு அடைவரப்பா
   அப்பனே தர்மனே அரங்கனே அண்ணலே கலியுக வள்ளலே
   காப்பாக உன்னுள் யானிருக்கின்றேன்
   கருணைகொண்டு உன் சக்தி கூட்டி
6. ஒப்புகொண்டு நித்தம் நித்தம்
   உந்தனுக்கு ஆற்றல்பெருக்கி காத்துவருகின்றேன்
   வருகவே உன் சொல் செயல் அனைத்தும்
   வையகத்தில் வேதமாக மாறும்

7. தருகின்ற உன் தர்மமே
உலகத்தை காத்தருள்புரியும்
பெருமைகொண்டு அற்புதத்தை நடத்தும்
பிரணவக்குடில் அரசன் நீ
8. அரசனே உன் கட்டளைகள் உலகத்தில் அரங்கேறி
வருங்காலம் ஞான ஆட்சியாக
ஞானத் தலைமையாக மாறும்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–

துறையூர் ஓங்காரக்குடிலாசானுக்கு **13.01.2024 சோபகிருது வருடம் மார்கழி 28ம் நாள்** சனிக்கிழமை முதல் **89**ம் வயது ஆரம்பம் இன்றைய தினத்திலே அகத்தியர் சன்மார்க்க சங்க தொண்டர்கள் அனைவரும் துறையூர் ஓங்காரக்குடில் ஆசான் ஆறுமுக அரங்கமகா தேசிகர் நீடு வாழ வேண்டும் என வாழ்த்துமாறு வேண்டிக்கொள்கிறோம்.